1971-72 ஆம் ஆண்டு
நிதி நிலை அறிக்கை

முதலமைச்சர்

மாண்புமிகு

திரு மு. கருணாநிதி

அவர்கள் ஆற்றிய உரை

1971 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் நாள்

தமிழ் நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு திரு மு. கருணாநிதி அவர்கள் 1971-72 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்ட மன்றப் பேரவைமுன் வைத்து 1971 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25-ஆம் நாளன்று ஆற்றும் உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1971–72 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும், 1970–71 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும் இம் மன்றத்தின்முன் தங்கள் ஒப்புதலுக்காக வைப்பதில் பெருமையடைகிறேன்.

2. வரலாற்றுப் புகழும் ஜனநாயக மரபும் நிறைந்து பாங்குடன் நடந்தேறிய ஒரு மாபெருந் தேர்தலுக்குப் பின்னர் ஈண்டு நாம் கூடியுள்ளோம். எங்களுடைய கட்சியின்பாலும் அண்ணா அவர்கள் உருவாக்கிய ஆட்சியின் மீதும் இந் நாட்டு மக்கள் பெருநம்பிக்கை வைத்து, சிறிதும் ஐயத்திற்கிடமின்றி, தெள்ளிய முறையிலே நல்லதொரு தீர்ப்பை அளித்துள்ளார்கள். மக்கள் தொண்டே மாண்புடைப் பணியெனக் கொண்டு இம் மன்றத்திற்கு வந்திருக்கும் மதிப்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். ஆளும் கட்சிக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் அனைவரும் சேர்ந்து நடத்துவதுதான் அரசு. அது போல அனைவரையும் சேர்த்து நடத்துவதுதான் நல்லரசு. எனவே, இம் மன்றத்தின் அகத்தும் புறத்தும் கூறப்படும் ஆக்கம் நிறைந்த நல்ல கருத்துக்களையும், அறத்தை அணி செய்யும் ஆலோசனைகளையும் இவ்வரசு வரவேற்று அவற்றைக் காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ந்து ஆவன செய்ய முற்படும் என்றும் உறுதி கூறுகிறேன்.

இடைக்கால வரவு-செலவுத் திட்டம்.

3. நான் இப்பொழுது அளிக்கும் வரவு-செலவுத் திட்டம் ஒரு இடைக்கால வரவு-செலவுத் திட்டமாகும். தேர்தலுக்குப் பின்னர் இக் குறுகிய காலத்தில் எல்லாத் திட்டங்களையும், அத் திட்டங்களுக்கான நிதி வாய்ப்புகளையும் முழுமையாகப் பரிசீலனை செய்து அவைமுன் வைப்பதற்குத் தேவையான நேரம் அரசுக்கு இல்லை. எனவே, புதிய திட்டங்கள் பல அடங்கிய திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டம் 1971-ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தில் இம் மன்றத்தின் முன்னர் வைக்கப்படும். இன்று அளிக்கப்படும் மதிப்பீடுகளில் 1971—72 ஆம் ஆண்டுக்கான வரவும், செலவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. எனினும், அடுத்த நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு உரித்தான மானியங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்குமாறு இம் மன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன். வரவு-செலவுத் திட்டம் சம்பந்தமான மற்ற குறிப்புகளோடு, 1969—70 ஆம் ஆண்டுக்கான கணக்குகளையும், 1970—71 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும், 1971—72 ஆம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடுகளையும் சுருக்கமாக விளக்கும் அறிக்கை ஒன்றும் இம் மன்றத்தின்முன் வைக்கப்பட்டிருக்கிறது. அவற்றுள் மாநில அரசின் நிதி நிலை பற்றிய சில சிறப்புக் கூறுகளைப் பற்றி மட்டும் சற்றே விரிவாகக் கூற விழைகின்றேன்.

வரவு-செலவுத் திட்டம்—ஒரு கண்ணோட்டம்.

4. 1971—72 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வருவாய்க் கணக்கின்கீழ் ரூ 349·6 கோடியும், மூலதனக் கணக்கின்கீழ் ரூ 30·85 கோடியும் சேர்க்கப்பட்டுள்ளன. இவை தவிர, உழவர்கள், உள்ளாட்சி மன்றங்கள், மின்சார வாரியம் முதலிய பிற நிறுவனங்களுக்குக் கடனாகவும் முன்பணமாகவும் தொகைகள் வழங்குவதற்காக ரூ 32·67 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசுக்குக் கடன் கணக்கில் செலுத்த வேண்டிய தவணைத் தொகை ரூ 36·72 கோடியும், வெளிச்சந்தையிலிருந்து திரட்டிய கடன் தொகைகளில் திருப்பிக் கொடுக்க வேண்டிய ரூ 8·85

கோடியும் இம் மதிப்பீடுகளில் அடங்கியுள்ளன. வரவு இனங்களைப் பொறுத்த வரையில், வருவாய்க் கணக்கில் ரூ 338·7 கோடியும், வெளிச் சந்தைக் கடன்கள் மூலம் ரூ 21·81 கோடியும், மத்திய அரசிடமிருந்து கடனாக ரூ 44·57 கோடியும் கிட்டுமென எதிர்பார்க்கிறோம்.

இவை தவிர, குறிப்பிடத்தக்க பிற வரவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆயுள் காப்புறுதிக் கழகம், வணிக வங்கிகள் போன்ற நிறுவனங்களிடமிருந்து நிகரக் கடனாகக் கிடைக்கக்கூடிய தொகை ரூ 3·37 கோடி ;

உள்ளாட்சி மன்றங்கள், இதர அரசு நிறுவனங்கள் இவற்றின் நிகர வைப்பீடுகள் (Deposits) ரூ 18·72 கோடி ;

கடன் வசூலிப்பு ரூ 19·27 கோடி.

மேற்கண்ட கணக்குகள் அனைத்தையும் சேர்த்துப் பார்த்தால், 1971—72 ஆம் ஆண்டில் மொத்தமாக ரூ 458·69 கோடி செலவாகுமென்றும், ரூ 446·44 கோடி வரவாகக் கிடைக்குமென்றும் தெரிகிறது. எனவே, 1971—72 ஆம் ஆண்டின் மதிப்பீடுகளில் ரூ 12 கோடி அளவுக்குத் துண்டு விழுவதைக் காணலாம். நடப்பு ஆண்டில் எழுந்துள்ள பற்றுக்குறையான ரூ 23 கோடியையும் இத்துடன் சேர்த்துப் பார்த்தால், 1971—72 ஆம் ஆண்டின் இறுதியில் ரூ 35 கோடி பற்றுக்குறையாக இருக்கும்.

ஐந்தாம் நிதிக் குழுவின் தீர்ப்பு.

5. அரசு மேற்கொண்ட பல ஆக்கப்பணிகளும் வளர்ச்சித் திட்டங்களும் அவற்றை நிறைவேற்ற எடுத்துக்கொண்ட விரைந்த நடவடிக்கைகளும் இப் பற்றுக்குறை ஏற்பட்டதற்கான பெரும் காரணங்களாகும். இவற்றுடன் இவ்வரசுக்குத் தேவையான—முறையாகக் கிடைக்கவேண்டிய மானியங்களை மத்திய

அரசு வழங்கத் தவறியதையும் இப் பற்ருக்குறை எடுத்துக் காட்டுகிறது என்பதையும் இம் மன்றத்தின் முன் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இரண்டாம் சம்பள ஆணைக்குழு அறிவித்த பரிவுரைகளின் அடிப்படையில், அண்மையில் நம் அரசு அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு அளித்திருக்கிறேம். சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்துவதால் ஒரு முழு ஆண்டில் அரசுக்கு ஆகக்கூடிய மொத்தச் செலவு ரூ 22 கோடியாகும். இதிலும், மற்ருெரு சிறப்பு அம்சமாக இவ்வூதிய உயர்வு 1970 அக்டோபர் 2-ஆம் நாள் முதற்கொண்டு செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனுல் அரசு அலுவலர்க்கு வழங்கப்படவேண்டிய சம்பள பாக்கியையும், 1970 மார்ச்சு மாதம் முதல், மாதம் ஒன்றுக்கு ரூ 10 வீதம் அரசு வழங்கி வரும் சிறப்பு ஈட்டுப் படியையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால், 1970-72 ஆகிய இரண்டாண்டுக் காலத்தில் ஏற்படக்கூடிய கூடுதல் செலவு ரூ 38 கோடியாகும். இதுபோன்ற செலவுகள் தவிர்க்க முடியாதவை என்பதை எதிர்நோக்கி, இவை வருவாய்க் கணக்கின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளன என்றும், இத்தகைய செலவுகள் அனைத்தையும் கருத்திற்கொண்டு நமக்குக் கிடைக்க வேண்டிய பற்ருக்குறை மானியங்களை அறுதி செய்ய வேண்டுமென்றும் ஐந்தாம் நிதி ஆணைக்குழுவின்முன் ஏற்கெனவே நாம் முறையிட்டுள்ளோம். ஏறத்தாழ பத்தாண்டுக் காலமாக சம்பள ஆணைக்குழு ஏதும் நியமிக்கப்படவில்லை. நம்முடைய அலுவலர்களின் ஊதியம் அண்டை மாநிலங்களில் உள்ள அரசு அலுவலர்களின் ஊதியத்தைவிடக் குறைவாக இருந்தன என்னும் உண்மையையும் குறிப்பாக ஐந்தாம் நிதி ஆணைக் குழுவிடம் வலியுறுத்திக் கூறினேம். எனினும், ஐந்தாம் நிதி ஆணைக் குழு நம்முடைய முறையீடுகளுக்குச் செவி சாய்க்கவில்லை என்பதை வருத்தத்துடன் கூறுகிறேன். இனியாவது இச் செலவை ஈடுகட்ட வேண்டிய அளவில், சிறப்பு மானியம் அளிக்கவேண்டும் என்று மத்திய

அரசையும் திட்ட ஆணைக்குழுவையும் திரும்பத் திரும்ப அணுகி வேண்டி வருகிறோம். நம்முடைய வேண்டுகோள் இதுகாறும் ஏற்கப்படவில்லை. ஒரு மாநில அரசுக்கு, எந்த அளவுக்குச் செலவு உயரக்கூடும் என்பதை அந்த மாநில அரசின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டே மத்திய அரசு மானிய உதவிகளைப் பகிர்ந்து கொடுக்க வேண்டுமேயன்றி, நிதி ஆணைக்குழு தன் அறிக்கையைத் தயார் செய்யும்போது, சம்பள ஆணைக் குழு அமைக்கப்பட்டதா இல்லையா என்பதை மட்டும் பார்த்து மானியம் வழங்கும் முறை ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்பதை அழுத்தம் திருத்த மாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிதி ஆணைக்குழு இம்மாதிரியான ஒரு முறையைப் பின்பற்றித்தான் செலவின மதிப்பீடுகளை அறுதியிடும் என்பதை மாநில அரசுகளுக்கு முன்கூட்டியே அறிவிக்கவில்லை.

மத்திய அரசு, தனது அலுவலர்களுக்கு வாழ்க்கைச் செலவினம் உயருவதற்கேற்ப ஊதிய உயர்வு அளிக்க முன்வருவதை நான் வரவேற்கும் அதே நேரத்தில் மாநில அரசின் அலுவலர்களுக்கும் அம்மாதிரியான ஊதிய உயர்வு அளிக்கப்படவேண்டிய கடப்பாடும் ஏற்படுகிறது என்பதை மறந்துவிடக்கூடாது. மத்திய அரசு தனது அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கும் போது மாநில அரசினருக்கு அதனால் ஏற்படக்கூடிய கூடுதல் சுமையையும் நாட்டத்திற்கொண்டு அதற்கானவன செய்திட வேண்டும். மாநில அரசில் குறைந்த ஊதியம் வாங்கும் அலுவலர்களுக்கு, விலைவாசியின் உயர்வுக்கு நிகராக அளிக்கப்படும் ஊதிய உயர்வினால் ஏற்படும் செலவில் ஒரு கணிசமான பகுதியையாவது மத்திய அரசு ஏற்று மானியம் அளிக்கும் திட்டம் ஒன்றை விரைவில் உருவாக்கவேண்டும். தேசிய அளவில், ஊதியம்-ஆதாயம்-விலைவாசி இவை மூன்றும் இணைந்த ஒரு கொள்கையை உருவாக்க வேண்டிய தேவையை அண்மையில் நமது ஆளுநர் அவர்கள்

தம்முடைய பேருரையில் குறிப்பிட்டுள்ளார்கள். அக் கருத்தை நானும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அவ்வாறான சீரிய கொள்கை ஒன்று செயலுக்கு வரும் வண்ணம் உருவாக்கப்பட்டால்தான், நாட்டின் பொருளாதார நிலையை அச்சுறுத்தி வரும் விலையேற் றத்தைத் தடுத்து நிறுத்திக் கட்டுப்படுத்த முடியும்.

மத்திய மாநில அரசுகளின் உறவுகள்-பொறுப்புக் களும் உரிமைகளும்.

6. மத்திய அரசிடமிருந்து நிதி வசதிகளை அதிக அளவில் நமது மாநிலத்திற்குக் கொடுக்கவேண்டும் என்னும் தமிழ் நாட்டின் முறையான வேண்டுகோள் நீண்ட காலமாகக் கவனிக்கப்படவில்லை. இது பற்றிய விளக்கங்கள் சிலவற்றை எடுத்துக் காட்டுவது ஏற்புடைத்தாக இருக்குமென நம்புகிறேன்.

இன்று நம் நாட்டில் செயற்பட்டு வரும் கூட்டு நிதி அமைப்பில், பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப வருவாயைப் பெருமளவில் ஈட்டித்தரும் சுங்க வரி, வருமான வரி, கார்ப்பரேஷன் வரி, ஆயத் தீர்வை (Excise Duties) போன்ற பெரும்பான்மையான வரி வாயில்கள் மத்திய அரசின் வசம் உள்ளன. மாநில அரசின் வரிகளுள், வருமான வளர்ச்சிக்கேற்ப நெகிழ்ச்சி யுடைய ஒரே வரி விற்பனை வரியேயாகும் என்பதை அனைவரும் அறிவர். இவ்வண்ணம் வரி விதிக்கும் உரிமை மத்திய அரசிடம் குவிந்து கிடக்கிறது; ஆனால், மக்கள் நலனைப் பேணிப் பெருக்குவதற்கான பெரும் பகுதிச் செலவை ஏற்கவேண்டிய பொறுப்பு மாநில அரசுகளிடம் நிறைந்து கிடக்கிறது. இவ்வாறு உரிமை ஒரு புறமும் கடமைப் பொறுப்பு மற்றொரு புறமும் இருக்கும்படியான விந்தை நிலைதான் நம்முடைய சிக்கல்கள் அனைத்திற்கும் அடிப்படைக் காரணமாகும். எனவே, நிதி வருவாயைப் பகிர்ந்து கொள்ளும் தற்போதைய முறையை மாற்றி அமைக்க வேண்டு மென்று நாங்கள் கருதுகிறோம். தேவை ஏற்படுமேல், இதன் பொருட்டு அரசியலமைப்புச் சட்டத்தையும் திருத்தியாக வேண்டும். மத்திய மாநில உறவுகளை ஆராயும் இராசமன்னார் குழுவின் அறிக்கை கிடைத்த

பிறகு, இத்தகைய மாற்றம் பற்றிய அரசினுடைய திட்டவட்டமான கருத்துக்களைத் தீர்மானிக்க இயலும் என்று நம்புகிறேன்.

ஐந்தாவது நிதி ஆணைக் குழுவின் அறிக்கை தமிழ் நாட்டுக்கு முற்றிலும் பாதகமான முறையில் அமைந் துள்ளது என்பதை முன்னரே நான் குறிப்பிட்டுள்ளேன். 1969 முதல் 74 வரை உள்ள ஐந்தாண்டுக் காலத்தில் எல்லா மாநிலங்களையும் சேர்த்துப் பார்த்தால், நிதி ஆணைக் குழுவின் தீர்ப்பின் வண்ணம் மத்திய அரசினுல் வழங்கப்படும் நிதி உதவி ஆள் ஒன்றுக்கு ரூ 98·5 ஆகும். ஆனுல், நம் மாநிலத்தை மட்டும் தனியே எடுத்துக் கொண்டு பார்த்தால், அவ்வாறு வழங்கப்படும் மத்திய நிதி உதவி ஆள் ஒன்றுக்கு ரூ 87·5 ஆகும். இவ்வாறு குறைந்த அளவில் நமக்கு வசதிகள் கிடைப்பதால் நமக்கு ஏற்பட்ட இழப்பு ரூ 44 கோடி அளவில் உள்ளது என்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். இவ் வுண்மையைச் சுட்டிக்காட்டி நியாயம் வழங்க வேண்டுமென்று வற்புறுத்திஞல் நிதி ஆணைக் குழு ஒரு சட்ட ரீதியான அமைப்பு என்றும், அது அளிக்கும் தீர்ப்புகளை மாற்ற இயலாது என்றும் காரணங்கள் கூறி இம் மாநிலத்திற்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை உறுதிப்படுத்த மத்திய அரசு முயலுகிறது.

மத்திய அரசிடமிருந்து மாநில அரசு பெறும் நிதி வாயில்கள்.

7. ஆனுல், இதற்கு மாருக வேறு சில மாநிலங்களுக்கு மத்திய அரசு தனி நிதி வசதி (Special accommodation) செய்து கொடுத்திருக்கிறது. திட்டக் குழுவும், அம் மாநிலங்களுக்குக் கூடுதல் தொகையை ஒதுக்கி உதவி அளித்துள்ளது. இவ்வண்ணம் சில மாநிலங்களின் குறைகள் களையப்பட்டிருக்க, நாம் மட்டும் ஏன் வஞ்சிக்கப்பட்டிருக்கிறேம் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை,

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மொத்த உதவித் தொகையில் இம் மாநிலத்திற்கு 10·8 சத வீதம் உதவி கிடைத்ததற்கு மாருக, நடப்புத் திட்டத்தில் 5·7 சத வீதந்தான் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஏற்கனவே, 1966–71 ஆண்டுகளுக்கென தீட்டப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இம் மாநிலத்திற்கு ரூ 250 கோடி உதவித்தொகை தருவதாக உறுதி கூறியிருந் தார்கள். இத் தொகையையும் ரூ 202 கோடியாகத் தற்போது குறைத்துள்ளார்கள்.

மாநிலங்களுக்கு மத்திய அரசு அளிக்கக்கூடிய மொத்த நிதி உதவியை ரூ 3,500 கோடிக்கு மேல் உயர்த்த இயலாது என்றும், இதனுல் நமக்குக் கிடைக்கும் உதவியையும் உயர்த்துவது மெத்தக் கடினம் என்றும் நம்மிடம் கூறினுர்கள். ஆனுல், அதே நேரத்தில் சில குறிப்பிட்ட மாநிலங்களுக்குத் தனி நிதி வசதி செய்து கொடுப்பதற்காக ரூ 800 கோடி ஒதுக்கப்பட்டதையும் நாம் கண்டோம். அம் மாநிலங்களுக்குக் கிடைக்கும் அதிக அளவு பங்கைப் பார்த்து நாம் பொருமை கொள்ளவில்லை. ஆனுல், அந்தச் சிறப்பு நிதி உதவி பெறும் திட்டத்திலிருந்து நம்மை ஒதுக்கிவிட்டது முற்றிலும் நியாயத்திற்குப் புறம்பானதாகும்.

மத்திய அரசினுல் மாநில அரசுக்கு அளிக்கப்படும் எல்லா நிதி உதவித் திட்டங்களையும் ஒன்று கூட்டிப் பார்த்தால், ஐந்தாண்டுக் காலத்திற்குத் தமிழகத்திற்குக் கிடைக்கும் உதவியின் அளவு ஆள் ஒன்றுக்கு ரூ 142·5 ஆகும். ஆனுல், அனைத்து இந்திய மட்டத்தில் ஆள் ஒன்றுக் கான சராசரியோ ரூ 185·5 ஆகும். தெளிந்து தேர்ந்த திறமையுடன் நிர்வாகத்தை நடத்தி, எந்த உயர்ந்த அளவிற்கு ஒல்லுமோ அந்த அளவிற்கு மாநிலத்திற் குள்ளேயே பெருநிதியை வருவாயாகத் திரட்டிய ஒரு மாநில அரசிடம், மத்திய அரசு இவ்வாறு நடந்து கொள்வது அழகல்ல என்பதை இத்தருணத்தில் வலி யுறுத்திக் கூறுகிறேன். இந்திய அரசின் உயர் மட்டத்தில் வீற்றிருப்போரிடம் இது பற்றி எடுத்துக் கூறியிருக்கிறேன். இந்தியத் தலைமை அமைச்சரும்,

இந்திய நிதி அமைச்சரும் இந் நிலையை ஊன்றிப் பார்த்து உரிய நீதியைத் திண்ணமாக வழங்கிடுவரெனத் தமிழ் நாடு எதிர்பார்க்கிறது.

8. மத்திய-மாநில அரசுகள் கடன் நிதியைப் பகிர்ந்து கொள்ளும் முறையிலும் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன. 1971—72-ஆம் ஆண்டில், மத்திய அரசிடமிருந்து இம் மாநிலத்திற்குக் கிடைக்கக்கூடும் என எதிர்பார்த்த கடன்களின் மொத்தத் தொகை ரூ 44·57 கோடியாகும். இவ் வாண்டில் நாம் மத்திய அரசுக்குத் திருப்பி அளிக்க வேண்டிய கடன் தொகை ரூ 43·72 கோடியாகும். நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தவணைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு இணங்கினால், கிட்டும் ஏழு கோடி ரூபாயும் இம் மதிப் பீட்டில் அடங்கியுள்ளது. ஆனால் நமது வேண்டுகோள் ஏற்கப்படாவிட்டால் இம் மாநிலத்திற்குக் கிடைக்கக் கூடிய நிகரக் கடன் தொகை ஒரு கோடிக்கும் குறை வானதாகவே இருக்கும். மத்திய அரசிடமிருந்து ஆண்டொன்றுக்கு எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்துக் கடனாக அளிக்கப்படும் நிகரத் தொகை அளவு ரூ 250 கோடியிலிருந்து ரூ 300 கோடி வரை உள்ளது. இவ்வாறு இருக்க, நம் மாநிலத்திற்கு மட்டும் ஒரு கோடி யளவில் இந் நிகர வரவு இருப்பது பெரிதும் வியப்பை அளிப்பதாக உள்ளது. வெளிச் சந்தைக் கடன்கள் மூலமாகவும், பற்றாக்குறை நிதி முறையிலும் மத்திய அரசு திரட்டும் வசதிகளிலிருந்து இம் மாநில அரசுக்கு எவ்விதப் பங்கும் கிடைப்பதில்லையென்னும் உண்மையை இதிலிருந்து நாம் உணரலாம். மத்திய அரசுக்கு 1971—72-ல் நாம் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தவணையோடு வட்டிப் பணத்தையும் கூட்டிப் பார்த்தால், கடன் தீர்வுக்காக நாம் மத்திய அரசுக்கு இவ்வாண்டில் செலுத்தவேண்டிய தொகை மத்திய அரசிடமிருந்து இவ்வாண்டிற்கென நாம் பெற இருக்கும் மொத்தக் கடன் தொகையைவிட ரூ 16 கோடி அதிகமாக உள்ளது. இந்த அடிப்படை உண்மையைக் கருத்திற்கொண்டே

கடன்சுமை.

மாநிலங்களுடைய கடன் சுமையைச் சீர்தூக்கிப் பார்த்து, அச்சுமையைக் குறைப்பதற்கான வழி முறைகளை ஆராய்ந்து கூறுவதற்காக கூட்டமைப்பின் கடன் ஆணைக் குழு ஒன்றினை அவசியமாகவும் அவசர மாகவும் அமைக்கவேண்டுமென்று நம்முடைய அரசு கருத்துத் தெரிவித்திருக்கிறது.

திட்ட அளவு.

9. தமிழ்நாட்டின் நலன் இவ்வாறு தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வந்த காரணத்தால் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் பல இடர்ப்பாடு கள் தோன்றியுள்ளன. இடையூறுகள் இவ்வாறு நேர்ந்த போதிலும், இந்த அவை முன் வைக்கப்பட்டிருக் கும் மதிப்பீடுகளில் தொடர்ந்து நடைபெறும் வளர்ச்சித் திட்டங்கள் அனைத்துக்கும் நிதி ஒதுக்கீடு செய்திருக் கிறோம். 1970–71 ஆம் ஆண்டிற்குக் குறைந்த அளவு ரூ 90 கோடியும், 1971–72 ஆம் ஆண்டிற்கு குறைந்த அளவு ரூ 100 கோடியும் உள்ள திட்டங்களைச் செயல் படுத்துவதற்குத் தேவையான நிதி உதவியைக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் வலியுறுத்திக் கேட்டிருக்கிறோம். நம்முடைய வேண்டுகோளுக்குச் சாதகமான முறையில் பதிலளித்து, நம்முடைய நிதிப் பற்றுக்குறையைப் போக்க இந்திய அரசு விரைவில் முன்வரும் என்று நம்புகிறேன்.

வளர்ச்சிப் பணிகள்.

10. இம் மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள திட்டத் தின் அளவு ரூ 91·13 கோடி ஆகும். திருத்த மதிப் பீடுகள் ஜூன் 1971-ல் இந்த அவையின்கண் வைக்கப் படும் பொழுது முழுத் திட்டமும் அம்மதிப்பீடுகளில் இடம் பெறும். இதற்கு மேலாக மத்திய அரசின் ஆதரவுடன் தொடங்கப்பெற்றுள்ள திட்டங் களுக்காக ரூ 11·7 கோடியும் இம் மதிப்பீடுகளில் அடங்கியிருக்கிறது. மேலும், மொத்தம் ரூ 4 கோடி செலவில் இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களையும் தனி கிராமப் பணித் திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்ற நமது வேண்டுகோளுக்கு மத்திய அரசு இசைவு தெரிவித்துள்ளது. சிறு குடியானவர்

களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்காக தென் ஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மொத்தம் ரூ 4·8 கோடி செலவில் சிறு குடியானவர்கள் மேம்பாட்டுத் திட்ட நிறுவனங்களை அமைப்பதற்கும் நிதி ஒதுக்கியிருக்கிறோம். மிகச் சிறிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் திட்டம் வட ஆர்க்காடு, சேலம் மாவட்டங்களில் செயல்பட இருக்கின்றது.

11. மின்சாரத்திற்காக ஒதுக்கியிருக்கும் ரூ 39·51 கோடி செலவுத் திட்டம் வரவு–செலவுத் திட்டத்தில் உள்ள தலைப்புகளில் மிகவும் சிறப்பானதாகும். மின் உற்பத்திக்கு மட்டுமே 1971–72-ல் ரூ 9·39 கோடி செலவாகும். மொத்தமாக கிராம மின்சார இணைப்பு வேலைகளுக்கு ரூ 21·50 கோடி செலவாகுமென்றும், இத் திட்டத்தின் மூலம் 1971–72-ம் ஆண்டுக் காலத்தில் 9,000 கிராமங்களுக்குப் புதிதாக மின்சார இணைப்பு கிட்டும் என்றும், 60,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கிடைக்குமென்றும் மதிப்பிட்டிருக்கிறோம். நிதி வசதியும், கச்சாப் பொருள்களும் தேவையான அளவுக்குக் கிடைக்கவில்லை என்றாலும்கூட, கிராமங்களுக்கு மின்சார வசதியைப் பரவலாக்கும் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறோம். மின் வசதி.

12. திட்டத்தில் அடங்கியதும் அடங்காததுமான இரு இனங்களையும் சேர்த்து கல்விக்காக ரூ 79·11 கோடி வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருக்கிறோம். 1966–67 ஆம் ஆண்டில் ஒதுக்கியிருந்த ரூ 43·86 கோடியோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இத் தொகை ஏறத்தாழ இரண்டு மடங்காகும் என்பது புலனாகும். அதைப் போலவே, மருத்துவத் திட்டங்களுக்காக ஒதுக்கியிருக்கும் தொகையும் 1966–67-ஆம் ஆண்டின் ரூ 11·73 கோடியிலிருந்து ரூ 20·53 கோடிக்கு உயர்ந்துள்ளது. வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள குறிப்பிடத்தகுந்த மற்றொரு இனம், குடிநீர்த் திட்டங்களுக்கான ரூ 14·65 கோடியாகும். மற்ற சமூகப் பணிகள்.

இத் திட்டங்களுக்காக 1966–67, 1969–70 இவ்வாண்டுகளில் ஒதுக்கியிருந்த தொகை முறையே ரூ 3·56 கோடியும், ரூ 5·42 கோடியுமாகும். வீராணம் திட்டத்திற்கு ரூ 7·88 கோடியும், நகராட்சி, பேரூராட்சிகளுக்கு ரூ 4·33 கோடியும், கிராமக் குடிநீர் வசதிக்கு ரூ 1·5 கோடியும் இத் திட்டங்களில் அடங்கியுள்ளன. குடிசைப் பகுதி மேம்பாட்டிற்காக ரூ 3 கோடியும், பிற வீட்டு வசதித் திட்டங்களுக்காக ரூ 2·87 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்திய அரசிடமிருந்து இதற்காகக் கிடைத்த உதவி ரூ 50 லட்சத்திற்கும் குறைவாகவே இருந்தபோதிலும், பிற்பட்ட வகுப்பினர், அரிசன வகுப்பினர் இவர்களுடைய நலனுக்காக ஆகும் செலவை உயர்த்தி ரூ 9·91 கோடிக்கு நிதி ஒதுக்கியிருக்கிறோம். இத் தொகையில் ரூ 3·7 கோடியை, பிற்பட்ட வகுப்பினர் நலனுக்கெனத் தனியாக ஒதுக்கியிருக்கிறோம். ரூ 6·2 கோடியை அரிசனங்களுக்காகவும் பழங்குடி மக்களுக்காகவும் ஒதுக்கியிருக்கிறோம்.

பாசனமும் நெடுஞ்சாலைகளும்.

13. பாசனத் திட்டங்களுக்கு இவ்வாண்டில் ரூ 8·48 கோடியும், சாலைகளைப் பேணுவதற்காக வழக்கமாக ஆகும் செலவுடன்கூட, புதிய சாலைகள் அமைப்பதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ 3·21 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகராட்சி.

14. சென்னை மாநகராட்சிக்கு, கடனாகவும், முன்பணமாகவும் வழங்குவதற்காக ரூ 1·65 கோடி வரவு-செலவுத் திட்டத்தில் அடங்கியிருக்கிறது. நீண்டகாலத் திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை மாநகரை மேம்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டுள்ளோம். சென்னை மாநகராட்சியின் நிதி நிலையை மேம்படுத்த வெளிச் சந்தையிலிருந்தும் ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்தும் கடன் தொகையைத் திரட்ட முடியும் என்று

நம்பிக்கை கொண்டிருக்கிறோம். மாநகராட்சியின் நிர்வாக அமைப்பில் செய்யவேண்டிய சில முக்கியமான மாறுதல்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

15. இதைத் தொடர்ந்து, மற்றொரு மகிழ்ச்சியான செய்தியையும் இம் மன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன். *மதுரை மாநகராட்சி.*

'' வானத்தன்ன வளநகர் மதுரை '' வரம்பறியாப் பண்டைப் புகழ் மண்டிக் கிடக்கும் ஒரு மாநகரமாகும். சங்கம் வைத்துத் தமிழாய்ந்த இப் பெருநகரின் சிறப்பை மாங்குடி மருதனார், நக்கீரர் போன்ற சங்கப் பெரும் புலவர்களும், தாலமி, பிலினி போன்ற மேலநாட்டு வரலாற்று அறிஞர்களும் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள். அந்தப் பழம்பெருமைக்கு ஒளியேற்ற முன்வந்துள்ளது இன்றைய தமிழக அரசு.

1971 மே 1-ஆம் நாள் முதல் மதுரை நகராட்சி ஒரு மாநகராட்சியாக உயர்த்தப்பட இருக்கிறது என்பதையும், இதற்குத் தேவையான சட்டங்கள் விரைவில் வரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

16. மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியது அரசின் தலையாய கடமையாகும். நாட்டின் வளனும் மக்களின் நலனும் பெருகும் வகையில் தற்போதைய பொருளாதார அமைப்பை மாற்றி அமைக்கவேண்டும். '' எல்லோரும் இந் நாட்டு மன்னர் '' என்று செம்மாந்து நாடு செழிக்கும் வகையில் ஏற்றத் தாழ்வற்றதும் விஞ்ஞான யுகத்திற்கு ஏற்றதுமான சமதர்ம சமுதாயத்தை உருவாக்க நாங்கள் ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளோம். வெறும் புள்ளிக் கணக்குப் போட்டுப் பார்த்து மட்டும் ஒரு பொருளா *மாநிலத் திட்டக்குழு.*

தாரத் திட்டத்தை வரைந்தால் நம்முடைய குறிக்கோள் கைகூடாது. நம்மிடையே உள்ள சிக்கல்களுக்குத் தீர்வு காண வேண்டுமென்றுல், எல்லோருக்கும் வேலை கிடைக்க வேண்டும் ; நாட்டின் இயற்கைச் சாதனங்கள் அனைத்தையும் பயன்படுத்தவேண்டும்; உற்பத்தித் திறனைப் பெருக்கவேண்டும் என்னும் குறிக்கோள்கள் அடங்கிய திட்டம் ஒன்று தீட்டப்படவேண்டும். இக் கருத்தை உள்ளத்திற்கொண்டு, நம்மை நெருக்கிவரும் வேலையின்மை, மக்கட் தொகைப் பெருக்கம், நிதிப் பற்றுக்குறை முதலிய சிக்கல்களைத் துடைத்து அவற்றை அறவே போக்கும் வகையில் நீண்டகாலத் திட்டம் ஒன்றைத் தீட்ட அரசு முடிவு செய்துள்ளது. இத் திட்டத்தைச் செவ்வனே வரைவதற்காக நிர்வாக அலுவலர்கள், பொருளாதார அறிஞர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் முதலியோர் அடங்கிய மாநிலத் திட்டக் குழு ஒன்றும் விரைவில் அமைக்கப்படும்.

தீட்டப்பட்ட திட்டம் ஒன்றிற்குத் தேவையான நிதி வாயில்களை எந்த வழியில் திரட்ட முடியும் என்பதில்தான் கவனம் செலுத்தவேண்டுமே தவிர, வேண்டிய நிதி வசதிகள் தற்போது காணப்படவில்லை என்பதால் திட்டச் செலவையும் வளர்ச்சி விரைவையும் குறைப்பது முறையாகாது. ஆக்கப் பணிகளை நிறைவேற்றும் வேகம் சிறிதும் குன்றுத, திட்டமிட்ட வளர்ச்சிக்கு நம்முடைய வரவு-செலவுத் திட்டம் ஒரு கருவியாக இருக்கவேண்டும். இந் நோக்கத்தின் முழுவடிவாக 1971 ஜூன் மாதத்தில் அளிக்கப்பட இருக்கும் திருத்த வரவு-செலவுத் திட்டம் அமையும். இடைக் கால வரவு-செலவுத் திட்டமாகிய இத் திட்டமும் வளர்ச்சி வேகத்தை எதிரொளிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது என்று கூறி, அரசியல் காழ்ப்பு—கசப் .ணர்ச்சிக்கு இடமளிக்காது தமிழ் நாட்டு மக்களை

வரும் சேர்ந்து நமது திட்டங்களை நிறைவேற்ற ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, 1971–72 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை ஏற்று இசைவளிக்குமாறு இம் மாமன்றத்தைப் பணிவன்புடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

மு. கருணாநிதி,
முதலமைச்சர்.

சென்னை,
1971 மார்ச் திங்கள் 25 ஆம் நாள்.